சிவமயம்

gistered as a News
paperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு புரட்டாதிமீ கஉ (1946 செப்டெம்பர் 17 செவ்வாய்க்கிழமை) [இல சசு

# பஞ்சம்! பசி! பட்டினி! நோய்! துன்பம்!

## இலங்கையில் இன்றுள்ள நிலைமை

### இவற்றுக்குப் பொறுப்பாளி யார்?

ஏழைகளின் இரத்தம் பிழிந்து ஏப்பம் விடும் சுயநலமிகள்

### சண்டாளச் சமூக அமைப்பே காரணம்!

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**யாருடையது?**

ஒருபடி "பறைவெட்டிய" கண்ணாடிப் பச்சையரிசியுடனும், ஒருருத்தல் மாவுடனும், ஒருவன் அல்லது ஒருத்தி ஒருவாரம் முழுவதுக்கும் தன் பசியைப் போக்கமுடியுமா? முடியாது! இதனை இன்று [illegible] வாதிகாரம் படைத்துள்ள செனாயக்கா அறியாரா? அப்படிக் காலம்கழிக்கமுடியும் என்று மிஸ்ரர் செனாயக்கா கூறுவாரேயானால், அவரே இந்த ஒருபடி அரிசியையும் ஒருருத்தல் மாவையும் தின்று இலங்கைமக்களுக்குக் காட்டுவாராக. இன்று இலங்கையில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றிக் கஷ்டப்படுவதை மிஸ்ரர் செனாயக்காவும், அவர் பாடும் பல்லவிக்குத் தாளம் போடும் சுயநலமிகளும் அறியமாட்டார்கள். மாடமாளிகைகளில் அவர்கள் வதிகின்றனர். அறுசுவை யுண்டி அருந்துகின்றனர். இன்பமே அல்லாது துன்பத்தைக் காண்கிலர். அவர்களுக்கு எதுஎது வேண்டுமோ, அது அது நிமிஷத்துக்கு நிமிஷம் கிடைக்கிறது. ஆனால், இந்தப் போகபோக்கியங்களும், சுகவாழ்க்கையும் ரம்மிய நிலையும் யாரால் எப்படிக் கிடைத்துள்ளன? இந்த இலங்கையில் உள்ள ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் நெற்றி வியர்வை சிந்தப் பாடுபட்டுழைத்து வரிப்பணமாக இறுத்த அரசிறை வருவாயில் இருந்து ஆயிரக் கணக்கில், இந்த மந்திரிமாரும் இவர்களது கையாட்களான அரசாங்கசபை யங்கத்தவரும் பெறுவதாலேயே இவர்களுக்கு இந்தக் குபேர வாழ்க்கைகிடைத்திருக்கிறது, அன்றி இவர்கள் பிறக்கும்போது கொண்டு வந்தது இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும்நன்றாகச்சிந்திக்கவேண்டியது. இந்த மந்திரிமாரும் ஏனைய அரசியல் மன்றத்து அங்கத்தவர்களும் உண்ணும் ஒவ்வொரு தின்பண்டமும், இலங்கை மக்கள் ஒவ்வொருவரதும் தசையினின்றும் எடுக்கப்பட்டதாகும். அவர்கள் அருந்தும் பானத்து ஒவ்வொரு துளியும் இலங்கையின் ஏழைகளின் இரத்தத்தால் வந்ததாகும்; அவர்கள் அநுபவிக்கும் சகலபொருள்களும் ஏழை இலங்கை மக்களை வருத்திக் கசக்கிப் பிழிந்து வடித்து எடுத்ததாகும்.

○

**வறுமை! வறுமை!**

கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்! பட்ட

வேட்டுவர், பதவி வேட்டுவர்க்கும் இலங்கையரசியல் வானத்தில் இன்று "நட்சத்திரங்கள்" என மிளிர்வோருக்கும் சகல போகபோக்கியங்களையும் அளிக்க ஏதுவாயுள்ள இலங்கை மக்களின் நிலை என்ன?

"ஆடெரிபடர்ந்த கோடுயரடுப்பில்
ஆம்பிபூப்பத் தீம்பசியுழல
இல்லிகார்ந்த பொல்லாவறுமுலை
சுவைதொறும் சுவைதொறும்
பால்காணுமல்
குழவிதாய் முகம்நோக்க
மனைவிஎன் முகம்நோக்க
நான்உன்முகம்நோக்கிவந்தனன்"

என்று அன்று கூறிய புலவர் பெருமான் நிலைக்கு மக்கள் வந்து இரங்குகின்றனர்.

○

**பொல்லாத சமூகநிலை**

ஏழைக் குடியானவன்: அவனுடைய சிறு குடிசையில், பலநாட் சமையல் இல்லாமையினால், சமையல் செய்வதற்காக வுள்ள அடுப்பிலே காளான் முளைத்துவிடுகிறது. அவன் பசியால் தவிக்கிறான்; பட்டினியால் உயிர் போய்விடும் நிலைமையில் வேதனைப்படுகிறான். உழைப்பில்லை; பிழைக்க வழியில்லை; பிழைக்கும் மார்க்கங்கள் யாவும், மூட்டுப்பூச்சிகள் அனைய ஒருசிலரால் அடைக்கப்பட்டுவிடுகின்றன. பிழைப்புக்கு அகஸ்மாத்தாக வழியிருந்தாலும் அவனுடைய தேகம் உழைப்பதற்கு லாயக்கில்லை; என்பும் தோலுமாய்க் கங்காள உருவினனாகவுள்ள அவனை எவர்தான் பிழைப்புக்கு அழைக்கமுடியும்? அவன்மனைவி ஓர் பதிவிரதை! கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்ற எங்கள் கீழ்நாட்டுச் சம்பிரதாயப்படி வாழ்கின்ற உத்தமி: கற்புத் தெய்வம்! அவள் தன் கணவன் நிலையை அறிவாள்: ஆனால், கர்ம வயத்தினால், அவள் வயிற்றிற் பிறக்கப் பாவஞ் செய்த பச்சைக் குழந்தை உள்ள நிலைமையை அறியுமா? இந்த இலங்கையிலே ஒருசில பதவி வேட்டுவரான மூட்டுப் பூச்சிகள் சூழ்ச்சியால், சமூக அமைப்பினால், தன் தந்தைக்குப் பிழைப்பில்லை, வருமானமில்லை யென்ற உண்மையை அந்தச் சிசு அறியுமா? அது அறியாது. அதனால் அழவும் பெலம் இல்லை. அக் குழவி அழவில்லை: தன் தாய் முகத்தை நோக்குகிறது! தன் குழந்தை வாய்விட்டு அழுவதற்கு வலியற்றுத்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

## ஆசிய மகாநாடு

### நேருவின் சிறந்த முயற்சி

ஆசியாக் கண்டத்தில் உள்ள சலக நாடுகளின் மகாநாட்டை வருகிற பிப்ரவரி மாதம் அல்லது மார்ச் மாதம் கூட்டுவதற்குப் பண்டிதர் ஜவஹர்லால் நேரு முடிவு செய்துவிட்டார். அதற்கான அழைப்புப் பத்திரங்களும் அனுப்பப்பட்டுவிட்டன. இந்த மகாநாட்டிற் பங்குபற்றும்படி எங்கள் இலங்கைக்கும் அழைப்பு வந்திருக்கிறது

சுதந்திர நாடுகள் விஷயத்தில், அங்குள்ள அரசியல் தலைவராயுள்ளார்க்கே அழைப்புப் பத்திரம் அனுப்பப்பட்டிருக்கின்றன அடிமை நாடுகள் விஷயத்தில் அங்குள்ள பொதுஜன ஸ்தாபனங்களின் தலைவர்களுக்கே அழைப்புப் பத்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன

## சம்பளம்போதாது

### அரசாங்கசபை யங்கத்தவர்க்கு இன்னும் அதிகம் வேண்டுமாம்!

இன்று அரசாங்கசபையில் பிரதிநிதிகளாகவுள்ளவர்களுக்கு மாதந்தோறும் 500 ரூபா வேதனம் உதவப்படுகிறது. இந்தத் தொகை போதாது அதனை அதிகரிக்க வேண்டும் என்றும், இங்கிலாந்திலே தொழிற்கட்சியினர் அதிகாரத்துக்கு வந்ததும் அநுட்டித்ததுபோன்ற ஓர் சேம நிதி முறையை இங்கேயும் அரசாங்க சபையங்கத்தவர்கள் விஷயத்தில் கைக்கொள்ள வேண்டும்என்றும் சென்றவெள்ளிக்கிழமை நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் களனிப் பிரதிநிதி மிஸ்ரர் ஜே ஆர் ஜெயவர்த்தன ஓர் ஆலோசனை கூறினார்

"கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தானறியான்: அதுபோல நாங்கள் எல்லார்க்கும் சம்பளம் கூட்டிக் கொடுக்கிறோம். ஆனால் எங்கள் சம்பளத்தை அதிகரிக்க நாம் யோசிக்கவில்லை' என்னும் கருத்துப்பட மிஸ்ரர் ஜெயவர்த்தன கூறினார்.

# மாவரி, பன்னாடை

## தங்கம் வெள்ளி!

### இறக்குமதித் தடைகள் இன்னும் இருக்கின்றன

தங்கம், வெள்ளி என்னும் விலையுயர்ந்த உலோகங்களை இறக்குமதிசெய்வது இலங்கையில் இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

தென் ஆபிரிக்காவில் இருந்து ஓர் தொகைத் தங்கத்தைப் பெற இலங்கையரசாங்கம் முயற்சி செய்கிறது. ஆனால் அந்த முயற்சியினால் அநுகூலம் கிடைக்குமோ என்பது சந்தேகமாயிருக்கிறது.

இதற்கு முன், தங்கம் கொஞ்சமாவது அனுப்பும்படி இந்திய அரசாங்கத்தையும் இங்கிலாந்து அரசினரையும் இலங்கை கேட்டது ஆனால் அது பயன் கொடுக்கவில்லை. தங்கம் உற்பத்தி செய்யும் நாடுகள், தம் தங்கத்தை இவர்களுக்கு அனுப்பத் தயாராக இல்லை.

வெள்ளியின் நிலைமை அவ்வளவு மோசமாயில்லை. 120000தோலா எடை கொண்ட வெள்ளியை இலங்கையரசாங்கம் இந்தியாவிலிருந்து பெற்று வியாபாரிகளுக்குக் கொடுத்து இருக்கிறது.

### ஐக்கியதேச ஸ்தாபனத்தில் இந்தியப் பிரதிநிதிகள்

தென்னாபிரிக்காவில் இந்திய மக்களுக்கு விளைக்கப்படும் அநீதி ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது. இந்தியாவின் பிரதிநிதிகளாக பண்டிதர் நேருவின் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் தலைமையில் மிஸ்ரர் பிராங் அந்தோனி திரு K. C நியோகி என்பவர்கள் செல்லுவர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

### 1200 தொன் உருளைக் கிழங்கு

ஆஸ்திரேலியாவிலிருந்து சென்றவெள்ளிக்கிழமை 1200 தொன் உருளைக்கிழங்கு கொழும்பில் இறக்குமதியானது.

## ஆங்கில-அமெரிக்க விவாதம்

ஓர் மூலையிற் சும்மாகிடந்த மாவரி அடுப்பங்கரையில் இருந்த பன்னாடையைப் பார்த்து "உனக்கு ஓட்டைகள் பல உண்டு" என்றதாம். பன்னாடை சும்மா விடுமா? அது மாவரியின் துவாரங்களை எண்ணியது. இந்த அழகில் அமெரிக்க வர்த்தக மந்திரியான மிஸ்ரர் ஹென்றி வலேஸ் என்பவர்க்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குமிடையே ஓர்பெரிய வாக்குவாதம் மூண்டிருக்கிறது.

இங்கிலாந்து அதிகாரவெறி பிடித்து ஏகாதிபத்தியக் கொள்கையை நிலைநாட்ட முன்வந்திருக்கிறது அது ருஷியாவுடன் பிணக்குறுவது முறையல்ல. அதனுடைய அதிகார மோகத்தில் நாம் ஈடுபட்டு, ருஷியாவைப் பகைக்கக்கூடாது என்று மிஸ்ரர் வலேஸ் அமெரிக்க மக்களுக்கு ஓர் செய்தி விடுத்தார். அது மாத்திரமன்றி, ருஷியாவுடன் அமெரிக்கா நேசபான்மையுடன் இருக்வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மிஸ்ரர் வலேஸ் இப்படிக் கூறியதுதான் தாமதம்: பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்கும் அவர்களுடைய பத்திரிகைகளுக்கும் வந்தது கோபம். அமெரிக்க அரசாங்கத்தின் ஓர் பொறுப்புள்ள அதிகாரி இப்படிக் கூறலாமா என்றெல்லாம் இப்பத்திரிகைகள் கூறி, அமெரிக்காவின் அதிகாரவெறியையும், ஏகாதிபத்திய வாஞ்சையையும் பற்றி வெளுக்துவாங்குகின்றன.

சீனத்திலே அமெரிக்கர் செய்வதை உலகம் அறியாதா? அங்கே இவர்கள் சமதர்மிகளுக்கு எதிராக, சியாங்-கே ஷெயிக்கிற்கு உதவி செய்வதன் காரணம் என்ன? இன்னும் ஜப்பானில் இன்று அமெரிக்கர் செய்வது என்ன? இவற்றை உலகம் அறியாதா என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் முழங்குகின்றன.

### சென்னை மாகாணத்தில் மதுவிலக்கு

சென்னை மாகாணத்தின் மூன்றில் ஒரு பாகத்திலே, இப்போது பூரண மதுவிலக்கு முறை நடைமுறையில் வந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
புரட்டாதிமீ ௧௨ செவ்வாய்க்கிழமை

## புகைரதப்பிரயாணத்தில்நேரும் முறை கேடுகள்

வருவாய் குறை வெனினும் தாபனச் செலவில் இலங்கைப் புகைரதப் பகுதி அதிகங் கூடிய தென்றும், காரணம் அரசினரால் இப்புகைரதம் வைத்து ஓட்டப்படுவதே யென்றுஞ் சொல்வர்; இந்தியா மலாய்நாடுகளிற் புகைரதப் பிரயாணஞ் செய்தோர், பிரயாணிகளுக்காகிய சௌகரியங்கள் மேலே சொல்லப்பட்ட நாடுகளில் ஓடும் புகைரதங்களில் அதிகமுண்டென்று பாராட்டிச் சொல்வர்; இலங்கைப் புகைரதம் ஆரம்பத்தில் மிகவும் ஈனமான நிலைமையிலிருந்து காலகதியில் ஒருவாறு திருந்தி வரும்போது, இடையிலே இரண்டாம் உலக மகாயுத்தம் மூண்டுவிட, அந்த யுத்த காலத்திலே இலங்கைப் புகைரதம் ஊர்ப் பிரயாணிகளைப் பெரிதும் புறக்கணித்துப் பட்டாளப்பகுதியின் போக்குவரத்தின் பொருட்டு உபயோகிக்கப் படலாயிற்று. யுத்த காலத்திலே இலங்கையிலுள்ள மக்கள் புகைரதப் பிரயாணத்தை அஞ்சி வெறுத்தனர்; காரணம் பிரயாணிகளுக்குச் செய்யக்கூடிய வசதியீனங்களெல்லாம், அக்காலத்திலே அதிகாரிகளாலும் இராணுவத்தினராலுஞ் செய்யப்படலாயின; யுத்தம் முடியவே ஒருவாறு இராணுவத்தாரின் போக்குவரவும் புகைரதத்திற் குறையலாயின; இப்பொழுது புகைரதத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து விகிதமானோர் ஊரவர்களே பிரயாணஞ் செய்கின்றார்கள். யுத்தம்முடிந்து பல மாசங்கள் கழிந்தும், இலங்கையிலுள்ள வேறு ஸ்தாபனங்களிலே சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டும், புகைரதப்பகுதி மாத்திரம் மூந்திய நிலைமையைக் காட்டிலும் கேடான நிலைமையிலிருக்கக் காணப்படுகின்றது.

யுத்தகாலத்திற்கு மூந்தி இலங்கையரசினர் புகைரதப்பகுதியிற் களவு போதலென்னுங் குற்றம் மிக அற்பமெனலாம்; இந்திய புகைரதத் தொடர்களிலேயே களவு அதிகமென்ற கொள்கை எக்காலத்திலுமுண்டு; இந்த யுத்த காலத்திலேதான் இலங்கைப் புகைரதத்திற் களவு மிகவும் அதிகப்பட்டதெனவும், யுத்தம் முடிந்த பின்னரும் புகைரதத்திற் களவு போதல் நடைபெற்றுவருகிறதெனவும், புகைரதத்திற் களவு கொடுத்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்காக ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா அரசினர் வருவாயிலிருந்து உதவப்படல் வேண்டுமெனவும் போக்குவரத்துப் பகுதி மந்திரியாகிய மிஸ்ரர் J. L. கொத்தலாவலை மூலமாக அறியக் கிடக்கின்றது.

மேலும் பிபிலிப்பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் தகநாயக, இலங்கைப் புகைரதப்பகுதிப் பரிபாலனம் இப்பொழுதுமுறைகேடான நிலைமையிலிருக்கின்றதெனப் பல ஏதுக்கள்காட்டிப் போக்குவரத்துப் பகுதி மந்திரியாகிய மிஸ்ரர் கொத்தலாவலையைக் கண்டித்துப் பேசினர்; அதற்கு மிஸ்ரர் கொத்தலாவலை சமாதானஞ்சொன்னாரெனினும், இலங்கைப் புகைரதப் போக்குவரவு மிகவும் சீர்கெட்ட முறையிலிருக்கின்றதென்பதை இங்குள்ள மக்களெவரும் உணர்வர். இலங்கைப் புகைரதப்பகுதியிற் பிரயாணிகளின் பொருள்கள் களவு போதல், அரசினரின் கட்டுப்பாட்டுள் அடங்கிய உணவுப் பொருள்கள் ஏனைய பொருள்கள் திருடப்படுதலென்னும் இப்பெருந் தீமைகளோடு மாத்திரம் நின்று விடாமல், சில மாசங்களுக்கு முன் புகைரதக் காவலரொருவர் திருடராற் கொல்லப்பட்டதும், அவர் பொறுப்பிலிருந்த 'தபாற்' பைகள் திருடப்பட்டதும், அத் திருடர்களாயினும் தபாற் பைகளாயினும் இற்றை வரையில் அகப்படாதிருத்தலும் ஊரறிந்த விஷயமாகும். இவைகளுக்கெல்லாம் காரணம் யுத்தம் முடிந்து பலமாசங்கள் சென்றும், புகைரதப்பகுதியதிகாரிகள் புகைரதப் போக்குவரவைப் போதிய அளவிற்குத் திருத்தி நடத்த முயலாமையேயாகும்; யுத்தகாலத்திலே அகற்றப்பட்டனவாகிய (புகைரதத்திலுள்ள) அபாயத்தைத் தெரிவித்தற்காகிய சங்கிலிகளை இன்னமும் மேற்படி அதிகாரிகள் தொன்மைபோல் அமைத்தற்குச் சிந்தித்திலரென்பது புகைரதப் பிரயாணிகள் தெரிவிக்கும் பிரதான முறையீடாகும்; மேலும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்குரிய வண்டிகளிற் போதிய வெளிச்ச மில்லையெனவும், வண்டிகள் அழுக்கோடும் சிதைவு உடைவுகளோடும் போதிய மூட்டுப் பூச்சிகளோடுங் காணப்படுகின்றன வெனவுஞ் சொல்லப்படுகின்றது.

இப்படியெல்லா மிருப்பின் மக்கள் புகைரதப்பிரயாணத்தை வெறுத்து, பஸ்மூலமாகவே பயணஞ் செய்ய முயல்வர்; ஏனைய நாடுகளில் வியாபார சமுதாயத்தினரால் நடத்தப்படும் புகைரதங்கள் நல்லநிலைமையில் நடைபெற, இலங்கையிலே அரசினரால் நடத்தப்படும் புகைரதம் நல்ல முறையில் ஓடாதொழிதல் முறையல்லவே. யுத்தகாலத்திற்கு முன்னிருந்த நிலையிலாயினும் இலங்கைப் புகைரதத்தை இப்போதைக்கு நடத்தி வருதற்கு அதிகாரிகள் விரைவில் முயற்சி செய்தல் வேண்டும்.

### வரவுசெலவுக் கணக்கு விவாதம்

அரசாங்கசபையில் வரவுசெலவுக் கணக்குச் சம்பந்தமான விவாதம் சென்ற வெள்ளிக்கிழமை முடிவடைந்துவிட்டது. அரசாங்கசபை இனி வருகிற 24-9-45 ஆரம்பமாகும்.

# ஜின்னா-வேவல்சந்திப்பு

## சமரசம் நிகழுமா? ஜின்னா இணங்குவாரா?

இராஜப்பிரதிநிதி வேவல், தம்மைச் சந்திக்கும்படி முஸ்லிக்லீக்தலைவர் ஜின்னாவுக்கு அறிவித்தார் ஜின்னா நேற்றுப் பின்னேரம் இராஜப்பிரதிநிதியைச் சந்தித்தார். அச் சந்திப்பினால் ஏற்பட்டுள்ள பயன் என்னவென்பது இற்றைவரைதெரியவில்லை.

ஜின்னாவைஇராஜப்பிரதிநிதி அழைத்தது ஏன்? இன்று இந்தியாவிலே முஸ்லிம் லீக்கினர் செய்துள்ளவேலைகளால் ஏற்படும குழப்பமான நிலைமையை ஜின்னாவுக்கு விளக்கி சமரசமாகப் போவதன் அவசியத்தை வேவல் விளக்கியிருக்கலாம்,சமரசமாகப் போவதற்கு ஜின்னாவின் கடைசி முடிவு என்ன என்பதையும் விசாரித்திருக்கலாம்.

ஜின்னா இன்று ஓர் கேவல நிலைமையை ஆக்கியுள்ளார். அவர் இன்று இருதலைக் கொள்ளி எறும்புபோலத் தவிக்கிறார். அரசாங்கத்துடன் நேரடிப் போராட்டம் தொடங்குவது அசாத்தியம் என்பதை அவரும் அவரது சகாக்களும் நன்கு உணருகிறார்கள். அகிம்சையை ஆதாரமாகக் கொண்டுள்ள சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கும் "வீர வாள்" ஏந்திய முஸல்மான்களுக்கும் வெகு தூரம்; இன்னும் இப்படியான போராட்டத்தைச் சாந்தமூர்த்தி காந்தியடிகள் தொடங்கிப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பணியவைத்தார் என்பதற்காக, கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி போலத் தாமும் செய்ய முடியாது என்பதையும் ஜின்னாசாய்பு மெல்லமெல்லவாய் உணராமல் இருக்கமுடியாது. இப்படியான நிலைமையில், நேரு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவோ அவருடைய போலிக் கௌரவம் விடுகிறதில்லை "பாகிஸ்தான்" பல்லவியைப் பாடிக்கொண்டு ஒப்பாரி கூறுகிறார்.

ஆனால், ஜின்னாசாகிப் சும்மாவிருக்கவுமோ முடிகிறதில்லை இப்போது அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசாங்கம் ஜரூராகக்கடமையாற்றுகிறது. ஓர் சுதந்திர அரசாங்கம் எவ்வாறு கடமையாற்றுமோ, அதேபோல அது கருமம் ஆற்றுகிறது. இராஜப்பிரதிநிதி வேவலும், பிரிட்டிஷ் அரசாங்கமும் அதற்கிணங்கி நேருவுக்குப் பூரணமான ஒத்துழைப்பையளிக்கின்றனர். முந்தியிருந்தமாதிரி, மத்திய அரசாங்கத்து மந்திரிகள் தாம்தாம் நினைத்தபடி கருமம் ஆற்றி, தம் கருமங்களுக்கு இராஜப்பிரதிநிதிக்கே பொறுப்பாக இருக்கும் சம்பிரதாயம் நேரு பிரதம மந்திரியானதும் கவிழ்ந்துவிட்டது. ஜனநாயக முறைப்படி அரசியல் நடத்தும் சம்பிரதாயங்களை எல்லாம் நேரு ஆக்கியிருக்கின்றார். இவையெல்லாம் ஜின்னாவுக்குப் பெரும் தலையிடியையும்—ஏன் வயிற்றுவலியையும்—கொடுத்து அறியாமற் காலை வைத்தேனே

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# குறிப்புக்கள்

### இன்னும் தூக்கமா?

சைவமக்கள் இன்னும் தூங்குகின்றார்களா என்று கேட்கிறோம். கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்குவார்களானால், "மண்டெரிதான் வாய்மடுப்பினும் மாசுணம் கண்டுயில்வ பேரா பெருமுச் செறிந்து" என்றாங்கு ஓர் கேவல நிலைமை ஏற்படக் கூடும் என்பதைச் சைவமக்ளுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்; இந்த இருபதாம் நூற்றாண்டிலே, சகோதரத்துவம் சமரசம் என்பன நிலவவேண்டிய காலத்திலே, கேவலம் குறுகிய மனப்பான்மையுடைய ஒருசில மதப்பித்தர், பொருளாதார நிலையில் குறைந்தவர்கள மதநியுட் புகுந்து ஆசை காட்டி மதமாற்றம் செய்ய முயற்சிப்பது மிகவும் கேவலமான காரியம். அன்று யேசுநாதர் சமாதானம், சமரசம் என்ற உயரிய கொளகைகளை உபதேசித்தார். ஆனால் இன்று அவருடைய கொள்கைகளையும் போதனைகளையும் பின்பற்றுவதாகப் பறைசாற்றும் ஓர் சில ஆஷாடபூதிகள் அந்த மகானுடைய போதனைகளைக் காற்றில் பறக்கவிட்டு, மிகவும் அற்பத்தனமாக மதமாற்ற வேலையிற் பிரவேசித்துச் சின்னத்தனமான கருமங்களைப் புரிந்து ஏழை மக்களைப் பம்பரம்போல ஆட்ட முன்வந்துவிட்டனர். ஐரோப்பாவிலே, எங்கள் காலத்திலே நடந்துமுடிந்த இரண்டு யுத்தங்களும், கிறிஸ்துநாதர் போதித்த கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டதினாலேயே நிகழ்ந்தன. கிறிஸ்தவர் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் ஒரு சில சுயநலமிகளே இன்றைய உலகில் நிகழும் வேற்றுமைகளுக்கு மூலகாரணர் என்று கூறினால் அது மிகையாகாது ஆனால், எது எப்படியிருந்தபோதிலும் சைவமக்களாயுள்ளார் சற்றுக் கண்விழிப்பாயிருக்கவேண்டும் என்பதை நாம் ஞாபகமூட்ட விரும்புகிறோம். தம் குகைக்குள் மந்தைகளைச் சேர்க்க ஓநாய்கள் பதுங்கித் திரிகின்றன. உஷார்!

●

### அற்பத்தனம்!

சட்டம், நீதி என்பன பட்சபாதமின்றி எவர்க்கும் ஒரே ரீதியில் வழங்கப்படுவதே செங்கோன் முறையாகும். தனக்கொரு நியாயம பிறர்க்கொரு நியாயம் வழங்குதல் அரசியல் முறையாகாது. எம் தமிழ்நாட்டில் பொற்கைப் பாண்டியனும், இந்த இலங்கையில் எல்லாள மகாராசாவும இருந்து செங்கோலியற்றினர் என்ப. ஆனால் அதே எல்லாளன் இருந்து அரசுசெய்த இந்த இலங்கையில், நமது மந்திரிமார் தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் வழங்கி வருதல் உண்மையில் விசனத்துக்குரியதாகும். காணிக் கந்தோரில் 20 ஆண்டு திறமையுடன் கடமைபார்த்த கேவலம் ஓர் சேவகன், அரசாங்கத்துக்குரிய கடுதாசியை வைத்திருந்தான் என்ற குற்றத்துக்காக 1942ம் ஆண்டிலே அவனுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவனுடைய சீவிய வருவாய் கெடுக்கப்பட்டது. அந்த நீதியை அந்தக் கேவல மனிதன்மீது செலுத்திய எங்கள் இலங்கையரசாங்கம இன்று ஓர் மந்திரி அரசாங்கக் கடுதாசியைத துர்விநியோகப்படுத்துவதைக் கண்டிக்க மார்க்கந் தெரியாது இருக்கிறதா என்று கேட்கிறோம்! மந்திரி கொத்லாவலை அரசாங்கக் கடுதாசியை அரசாங்கத் தேவைக்கல்லாத வேறு தேவைகளுக்கு உபயோகித்தார் என்ற செய்தி பகிரங்கமாக வந்தும், இதுவரை அரசாங்கம் என்ன செய்தது என்று எங்கள் அரசாங்கத்தாரை நாம் வினவுகிறோம். வேலியே பயிரை மேய்ந்தால், இந்த நாட்டுக்கு விமோசனம் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபாஷ் சந்திர போஸ்!

## இருக்கிறாரா? இறந்துவிட்டாரா?

அடிமை இந்தியாவிற் பிறந்தாலும் அன்றைய பாரதவீரரின் இரத்தம் இன்றும் தன் நரம்பில் ஓடித்தான் செல்கிறது என்பதை அகில உலகுக்குங் காட்டி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நடுநடுங்க வைத்த வீரன் சுபாஷ் சந்திரபோஸ் எங்கே? அவர் சிலர் கூறுகிறபடி டொக்கியோவுக்குப் போகும் வழியில் விமானம் நொருங்கி இறந்துவிட்டாரா? அல்லது, பல செய்திகள் கூறுகிறபடி உயிரோடு இருக்கிறாரா? அப்படியானல் அவர் எங்கேயிருக்கிறார்? சிலர் அவர் ருஷியாவிலே அரசியற் சிறையாளராகவிருக்கிறார் என்றும், அவர் அங்கே மிகவும் கௌரவமாகவே நடத்தப்படுகிறார் என்றும் கூறுகிறார்.

அவர் ருஷியாவிலேயில்லை. அப்கான் எல்லைப் புறத்தில் இருக்கிறார் என்றும் சிலர் கூறுகிறார்கள், பாஞ்சாலச் சட்டசபை யங்கத்தவரும் சுபாஷ பேரஸ் ஸ்தாபித்த "பர்வர்ட் ப்ளொக்" என்னும் தீவிர முன்னேற்றக் கட்சியின் அங்கத்தவருமான ஸ்ரீதயாளதிருப்பதி என்பவர் சுபாஸ் போஸ் உயிரோடுதான் இருக்கிறார் என்றும், இந்த மாதப் பிற்பகுதியில் அல்லது அக்டோபர் முற்பகுதியில், இந்தியாவில் நிகழவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கிருவா[illegible]சபை என்னும் காங்கிரஸ் பாராளுமன்றக் கூட்டத்திலே தோற்றுவார் என்றும் அவரை வரவேற்கப் பாரத மக்கள் தயாராகவிருக்கவேண்டும் என்றுங் கூறுகிறார். பாரதநாட்டுக்குச் சுதந்திர வீரராக வந்து காங்கிரஸ் தலைமைப் பதவியைத் தாங்கி வழிகாட்ட வரவேண்டும் என்று பண்டிதர்நேரு ரேடியோ மூலம் அவருக்கு அழைப்பு விடுக்கவேண்டும் என்றுப் ஸ்ரீ திருப்பதி ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பண்டிதர் நேரு பாரத நாட்டின் முதற் பிரதம மந்திரியாக வந்ததும் சுபாஷ் போஸின்மீது விதித்துள்ள தடையுத்தரவுகளை நீக்கியதன் காரணம் என்ன?

சுபாஷ் பாபு இறந்துவிட்டால், அவருடைய பிரேதத்தை எவராவது கண்டனரா? எவராவது அவர் பிரேதத்தைக் காணவில்லை. அவர் இறந்துவிட்டார் என்பதற்கு அடையாளமாக, ஜப்பானிய அதிகாரிகள் கொஞ்சச் சாம்பலைக் கொடுத்தனர்

சுபாஷ்போஸ், பர்மா வீழ்ச்சியடையப்போகும் சந்தர்ப்பத்தில், சுதந்திர இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமாகவிருந்த தங்கப் பாளங்களை எடுக்க வந்தார். அந்தத் தங்கப் பாளங்களை அவர் எடுத்தாரா? இப்படியான பல கேள்விகள் எல்லாம் இப்போது பிறக்கின்றன,

இப்போது இன்னொரு செய்தி வெளிவருகிறது. அவர் இந்தியாவுக்கு வந்துவிட்டதாகவும், வார்தா அருகில் இருப்பதாகவும், அவரது முந்திய காரியதரிசியான ஸ்ரீ எச் வி சாமத் கூறியதாக ஓர் கல்கத்தாப் பத்திரிகை கூறுகிறது

## சிவாலயத்திலுள்ள விக்கிரகம்

### தவறிப்போய் பின் அகப்பட்டுவிட்டால் செய்யும் பிராயச்சித்தம்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

முதல் கும்ப ஸ்தாபனஞ் செய்து நியாசம் தியானம் இவைகளால் முறையே பூசித்து சிவாக்கினியை யுண்டாக்கி அவ்வக்கினியிற்றானே, தவறிப்போனமூர்த்தியின் மூல மந்திரத்தால், வில்வச்சருகு, பலாசஞ்சருகு, அத்திச்சருகு அறுகு இவற்றால ஆதுதி பண்ணிய புகையிலே, சிற்பியினாலே அதிசுந்தரமாகப் பழைய களிம்புகள் போகும்படியாக மினுக்கிய அந்தவிக்கிரகத்தைக்காய்ச்சிப் பஞ்சகவ்வியத்தால் சுத்தி செய்து அஷ்டமிருத் பஞ்சத்துவக்கு, காந்தோதகம், ஆட்யோதகம், மார்ஜனோதகம், பரிமார்ஜனோதகம், கந்தோதகம்; புஷ்போதகம் பலோதகம், ரத்னோதகம், தாதுகம், லோகோதகம், சுத்தயிருத் உதகம், சிருங்கோதகம், அஸ்திரோதகம், முதலியவற்றால் அபிஷேகித்து ஸ்பரிசாகுதியுஞ் செய்து முன் பூசித்துள்ள கும்பாபிஷேகஞ்செய்க,

சிலாவிக்கிரகமானல் சமுத்திரத்தில மூன்று இரவு வைத்துப் பின் எடுத்து முன் சொன்ன சுத்திசெய்து எடுக்கவேண்டும். இவை சிர்ஞோத்தாரதசகம், காலோத்தரமென்னும் ஆகமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அஷ்டமிருத் ஆவது:- ஆற்றுமண், மலைமண், கடல்மண், ஆனைக்கோட்டு மண், இடபக்கோட்டு மண், புற்றுமண், நண்டுவளைமண், தருப்பையடிமண் பஞ்சத்துவக்காவது:- நாவற்பட்டை, மாம்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை, அத்திப்பட்டை, பத்திரோதகமாவது:- அலரியிலை, மருதமிலை, துளசியிலை, வில்வமிலை, காந்தோதகமாவது:- சூரியகாந்தம், சந்திரகாந்தம், ஊசிக்காந்தம், ஆட்யோதகமாவது:- கிருஷ்ணப்பிரகம், வச்சிராப்பிரகம், சிறு தேன்மெழுகு, பெருந் தேன்மெழுகு சந்தனம், மார்சனோதகமாவது:- நெருஞ்சி சிதேவியார் செங்கழுநீர், விஷ்ணுகிராந்தி, மல்லிகைப்பூ, மஞ்சள்மா. பரி

மார்ச்சனோதகமாவது:- அறுகு நுனி, தெற்பைநுனி, வெண்கடுகு, முத்தற்காசு கந்தோதகமாவது:- சந்தனம், காரகில் முத்தற்காசு, சடாமாஞ்சில், குங்குமம், ஏலப்பட்டை, கோட்டம், சாதிக்காய், பூலாங்கிழங்கு. புஷ்போதகமாவது:- புன்னைப்பூ, சிறுநாகப்பூ, வெள்ளைமந்தாரைப் பூ நந்தியாவர்த்தப்பூ, மதுமத்தம்பூ, வெள்ளெருக்கம் பூ, மகிழம்பூ. பலோதகமாவது:- பலாப்பழம், தேங்காய்ப்பூ நாரத்தம்பழம், கடார நாரந்தம்பழம், எலுமிச்சம்பழம், மாம்பழம். ரத்னோதகமாவது:- மாணிக்கம்,இந்திரநீலம்,முத்து, மரகதம், கோமேதகம், புஷ்பராகம், வைரம், வைடூரியம், பவளம் தாதுகமாவது:- கருநிமிளை, அரிதாரம், சமுத்திராப் பச்சை, மனேசிலை, காவிக்கல், கோரோசனை லோகோதகமாவது:- பொன், வெள்ளி, செம்பு, இருப்பு, தரா, ஈயம், வெண்கலம், பித்தளை; சிருங்கோதகமாவது:- மான்கொம்பு, யானைக்கோடு, புலிக்கோடு, காண்டாமிருகக் கொம்பு. அஸ்திரோதகமாவது - வாள், துறட்டி, பாசம், பரசு, சூலம் இவைகளினால் அபிஷேகஞ் செய்தாற்றான் தீண்டாதார் தீண்டிய குற்றம் நீங்க சுவாமி சாந்நித்தியமாக எழுந்தருளியிருப்பர். நிற்க

எந்த மூர்த்தி தவறிப்போனாலும் உடனே அம் மூர்த்தியைக் குறித்து ஒரு கும்பமோ அல்லது ஸ்நபநம் வைத்துத் தினமும் பூசித்து வரவேண்டும். கும்பம் ஒருமாசம் வரையும்இருக்கலாம், அதற்குள் அம்மூர்த்தியோ வேறு புதிதோ வந்துவிட்டால் சுத்தி செய்து கும்பங்களை அதில் ஆவாகித்து விடலாம்; நாளாகுமேயானல் அக் கும்பத்தைப் படத்தில் ஆவாகித்து ஒரு வருஷம் வரையும் பூசிக்கலாம் இதுவே சாஸ்திரசம்மதம்.

## 2 கோடி 60 லட்சம் ரூபா

குணதிலகா — காலின்ஸ் சம்பளத் திட்டத்தின்படி அரசாங்க உத்தியோகஸ்தர்களின்சம்பளங்களை நடப்புவருட ஜனவரி 1ம் தேதியிலிருந்து செப்டெம்பர்மாத முடிவுவரை உயர்த்திக்கொடுக்க ரூபா 2 கோடி 60 லட்சம் உபமான்யத்தை மந்திரிசபை சென்ற செவ்வாய்க்கிழமை அங்கீகரித்தது.

## எங்கள் நாடு

வீரரின் உயிரே, ஆன்ம வெற்றியின் விளக்கே, இந்தப்
பாரினுக் கேல்லா ஞானப் பரிதியே, சுருதித் தாயே!
தீரர்கள் போற்றி செய்யத் தேவர்கள் வாழ்த் தேடுக்கப்
பூரண யோக சக்தி யாகநீ போலிக மாதோ!

புண்ணிய பூமியே, வீரருக்கு உயிர்போன்றவளே, ஆத்மசக்தியின் வெற்றிக்கு விளக்கானவளே, உலகிறசெல்லாம் ஞானசூரியனனவளே, அருட்பாடல்களான சுருதிகளைத் தந்த தாயே தீரர்கள் போற்றித் துதிக்க, தேவர்கள் வாழ்த்த, பரிபூரண சித்தியைத் தரும் யோகசக்தியாக நீ என்றும் உலகில் விளங்குவாயாக.

—சுவாமி சுத்தானந்த பாரதி.

# சந்திரமதியில்லா "ஹரிச்சந்திரா"

## லண்டனில் நடக்கும் விகட நாடகம்

பலஸ்தீனத்திலே யூதரின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்று ஆராய்வதற்கு லண்டனில் ஓர் வட்டமேசை மகாநாடு கூடியிருக்கிறார்கள். இந்த மகாநாடு ஓர் விகட நாடகமாகவே முடியும் என்பதற் கையமில்லை. சந்திரவதியும் அரிச்சந்திரனும் இல்லாத "அரிச்சந்திர" நாடகம்மாதிரியே இது இப்போது நடக்கிறது. இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்டுள்ள யூதரும். அரபுப்பிரதிநிதிகளும் இம்மகாநாட்டைப் பகிஷ்கரித்துவிட்டனர். சில அரபு மன்னர்களை மாத்திரம் வைத்துக்கொண்டே பிரிட்டிஷ் அரசாங்கம் மகாநாட்டை நடத்துகிறது.

மகாநாடு லண்டனில்நடக்க, பலஸ்தீனத்திலே யூதர் தம் பயங்கர இயக்கத்தை மிகவும் விமரிசையாக நடத்தி வருகிறார்கள் லண்டன் மகாநாடு ஆரம்பமாகிய அதேநேரத்தில் யூதர் சில அரசாங்கக் காரியாலயங்களைத் தாக்கிச் சில உத்தியோகத்தரைக் கொன்றுவிட்டனர். சென்ற வெள்ளிக்கிழமை ஆயுதபாணிகளான சில யூதர் பலஸ்தீனத்துள்ள இரு வங்கிகளைத் தாக்கி ஒரு வங்கியிலிருந்து 5000 பவுணைக் கொள்ளையடித்தனர், இந்த அழகில் சமரசப் பேச்சுக்கள் லண்டனில் நடக்கின்றன

பலஸ்தீனத்தை இரு பிரிவாக்கி அராபியர்க்கும்,யூதர்க்கும் ஒவ்வோர் பாகத்தைக் கொடுத்தால் என்ன என்று பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் ஆலோசனையைக் கூறியுள்ளது. ஆனல் இந்தியாவிலே ஜின்னசாய்புவின் பல்லவியான துண்டாடும் விஷயம், அராபியர்க்கு விருப்பமாயில்லை, துண்டாடும் விஷயத்தை அவர்கள் கடைசிவரை எதிர்க்கத் தீர்மானித்துள்ளனர். பலஸ்தீனம் அராபியர் நாடு; பிந்திவந்து குடியேறிய யூதர்க்கு அங்கே உரிமையில்லை. நாட்டைத் துண்டாட எவர்க்காவது உரிமையில்லை என்று வாதம்புரியும் முஸ்லிம்களான அராபியர், இந்தியாவிலே ஹிந்துக்களின் சொந்தமான பாரதநாட்டைத் துண்டாடிப் பாகிஸ்தான் வழங்கவேண்டுமென விதண்டாவாதம் புரியும் ஜின்ன சாய்புவுக்கு என்ன கூறுவர்? அராபியர் நிற்கும்நிலை சிறந்தது என்று அவர்களைப் பாராட்டும் ஜின்னசாய்பு பாரதநாட்டின் விஷயத்தில் அவர்களைப் பின்பற்றுதுசண்டித்தனம் காட்டி ஹிந்துக்களை வெருட்டத் துணிவதும் ஏன்?

## சேர் ஒலிவர் பறந்துபோனர்

இப்போது லண்டனில் சில நாட்களாக நின்ற சேர் ஒலிவர் குணத்திலகா, சென்ற சனிக்கிழமை விமான மூலமாக அமெரிக்காவுக்குச் சென்றார் அவர் அங்கே இரண்டு அல்லது மூன்று வாரம்வரை தங்கியிருப்பாராம். எதற்காக அங்கே போனர் என்பது மர்மமாகவிருக்கிறது.

## கைத்தொழில் மந்திரி

இலங்கைக் கைத்தொழில்மந்திரி மிஸ்ரர் ஜீ. வி எஸ் கொறியா, இங்கிலாந்திலே இலங்கையரசாங்கத்தின பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இம்மாதம் 26ம் திகதி இலங்கையை விட்டுப் பிரயாணமாவார் என்று தெரிகிறது.

## பாரதி விழா

கொக்குவில் கிழக்கு மனோன்மணி இலவச வாசிகசாலை இளைஞர் சங்கத்தாரால் ஆவணி 26ந்தேதி(11-9 46) புதன்கிழமையன்று பாரதிதின விழா கொண்டாடப்பட்டது. அத்தருணம் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றிய சொற்பொழிவு பண்டிதர்க.சுப்பிரமணியம், வித்துவான்K. கார்த்திகேசு ஸ்ரீ இராமகிருஷ்ணன் என்பவர்களால் நிகழ்த்தப்பட்ட[illegible]

## 35000 பேர்க்கு வேலையில்[illegible]

இலங்கையில் இப்போது 35000 பே[illegible]கு வேலையிலலை என்று ஓர் அரசா[illegible] அறிக்கை கூறுகிறது.


## ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்[illegible]ளும் மருந்து அருந்திய நேரம் தொடங்[illegible] வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும், எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.
(Mis 160 30-8—30-11-46)


## கோண்டாவில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் கோவில்

மேற்படி கோவிலின் நிர்வாக முறைகளைக் கவனிக்கவும், மேற்பார்வை செய்யவும் ஒரு அதிகார சபையைத் செரியும் நோக்கமாக நிகழும் வியவருஷம் புரட்டாதிமீ 4-ம் நாள் 20-9-46 வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மேற்படி கோவிலில், ஸ்ரீமான் சி. முத்துவேலு J. P. அவர்களின் தலைமையில் ஒரு பகிரங்க கூட்டம் கூட்டப்படும்.

அத்தருணம் ஷெ கோவிலில் வழிபடுவோர் யாவரையும் சமுகம் தரும்படி வேண்டிக் கொள்கிறோம்.

1. சி. மார்க்கண்டு
2. சே. சனகசபை
3. அ. தில்லையம்பலம்
4. இ. கந்தையா

Mis 175 13—17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண. ஞானப்பிரகாசரின் மதமாற்ற வேலை

## பள்ளர் மீது பரிதாபங் கொள்கிறார்!

### நிலத்தை வாங்கித் திருத்தியது ஏன்? கோவிலைப் பிடுங்கினார் "சேர்ச்" வைத்தார்

### மதம்மாற மறுக்கும் பாமர மக்கள்

நவக்கிரி மதமாற்ற விசாரணை உபசபை அறிக்கை

நீர்வேலிச் சைவ இளைஞர் சங்கக் காரியதரிசி அவர்கள் 27-6-42 ல் அன்று அச்சுவேலிக்குச் சமீபமான கிராமத்தில் சில பட்குடும்பத்தினரை சுவாமி ஞானப்பிரகாசர் மதமாற்றம் செய்தார் எனத் தெரிவித்து எழுதிய கடிதம் 14-7-46 ல் அன்று நடைபெற்ற யாழ்ப்பாணம் சைவபரிபாணம் சைவபரிபாலனசபையின் நிருவாகசபைக் கூட்டத்தில் யோசிக்கப்பட்டு, அவ்விஷயத்தைப்பற்றி வேண்டிய விசாரணையைச் செய்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு திருவாளர்கள்: தி. இராசநாயகம், பொ. அப்புக்குட்டி, அ. கனகசபாபதி, ச செல்வராசா, மு. மயில்வாகனம் ஆகிய இவர்களை அங்கத்தவர்களாகக்கொண்ட ஒரு உபசபை நிறுவப்பட்டது.

2 மேற்குறித்த விசாரணையை குற ... கிராமத்தில் நடத்துவதற்குமுன், ...வபரிபாலன சபைக் காரியதரிசி, ...வலிச் சைவ இளைஞர் சபைக் ...தரிசிக்கும், வதிரித் தேவரை ... வித்தியாசாலை கா. சூரன் என் ...நக்கும் அச்சுவேலியிலுள்ள ஆசி... திரு இ. தாமோதரம்பிள்ளை ...ர்களுக்கும் குறித்த விசாரணைக்குத் துணை புரியும்படி கடிதங்கள் எழுதினார். அவர்கள் பதில்களை அறிந்து விசாரணையை நடத்தவேண்டியமையினால், அவ் விசாரணையை 29-8-46 க்கு முன்னர் வைத்துக் கொள்ளமுடியவில்லை. 29-8-46 ல் திருவாளர் திரு. இராசநாயகமொழிந்த ஏனைய உபசபை அங்கத்...வர்கள், நீர்வேலி இளைஞர் சங்கத் ...லைவர் திரு. சிற்சபேசன் அவர்களை ...ச் அழைத்துக்கொண்டு மோட்டார் ...தம் மூலமாக மேற்படி மதமாற்றம் நடந்ததெனத் தெரிவிக்கப்பட்ட கிராமத்துக்குக் காலை ஒன்பதரை மணிக்குச் சென்றார்கள். எங்கள் விசாரணையை நடத்துவதற்கு அக்கிராமத்தைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை சுப்பையா என்பவர் பெருந் துணையாக இருந்தார்.

3 மேற்படி மதமாற்றம் நடந்ததெனத் தெரியப்பட்ட கிராமம் நிலாவரைக்கு அருகாமையிலுள்ள நவக்கிரி என்பதாகும். இக் கிராமத்திலோர்பாகம் புத்தூர் மேற்கையும் இன்னொரு பாகம் அச்சுவேலி தெற்கையும் சேர்ந்ததாகும். இக்கிராமத்திற்கு ஊடாக நிலாவரையிலிருந்து அச்சுவேலிக்கு ஒரு ரோட்டு போடப்பட்டிருக்கின்றது. இந்த ரோட்டுக்...தக் கிழக்கிலுள்ள பாகம் புத்தூர் ...மேற்கைச் சேர்ந்தது. மேற்கிலுள்ள பாகம் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்...து. இந்த ரோட்டுக்குக் கிழக்கரு...ல் உள்ள இணமாலைக்கலட்டி என் ...ம் ஏறக்குறைய 200 பரப்பு விசா...முள்ள நிலத்தில் ஓர் அண்ணமார் ...கோவில் நெடுங்காலமாக இருந்தது. கோவிற் கட்டடம் ஓலையால் வேயப்பெற்ற கொட்டகையாக இருந்தது. இக்கொட்டகையைச் சுற்றி பல விருக்ஷங்கள் நின்றன. அவற்றுள் 2 ...பெரிய அரசமரம், 1 ஆலமரம், 6 ...இயமரம், 5 பூவரசு. இந்த அண்...மார் கோவிலைச்சுற்றி புத்தூர்மேற்...ம், அச்சுவேலி தெற்கிலும் உள்ள பள்ள வகுப்பைச் சேர்ந்தவர்கள் மேற்படி கோவிலில் பண்டைக்காலந் தொடக்கம் வழிபாடு செய்து வந்தார்கள். எங்களுக்குச் சாட்சியங் கூறியவர்களில் ஒருவராகிய வைத்தி சடையர் என்பவர் அக்கோவிலில் கடைசிப் பூசாரியாகக் கடமையாற்றியதாகத் தெரிகிறது. ஷை கிராமத்துப் பஞ்சமர்கள் தினமும் விளக்கேற்றி அக்கோவிலில் வழிபட்டு வந்தார்கள். விசேஷ காலங்களில் பொங்கல் முதலியன செய்தார்கள்.

4 1938-ம் ஆண்டளவில் புத்தூரைச் சேர்ந்த வல்லிபுரம் நாகநாதர் என்பவர் குறித்த அண்ணமார் கோவிலிருந்த நிலத்தைத் தமது சொந்தமெனக் காட்டி "சுவாமி" ஞானப்பிரகாசர் அவர்களுக்கு அறுதியாக விற்றுவிட்டார். அதன்மேல் சுவாமி ஞானப்பிரகாசர் அந்நிலத்தில் ஆட்சியெடுத்து கோவிலை அழித்து அங்கு நின்ற மரங்களையும் அடியோடு தறித்து சூலம் முதலியவற்றையும் பிடுங்கிவிட்டு அங்கு ஒரு கிறிஸ்தவ ஆலயத்தை சென்ற ஐந்து வருடங்களுக்குமுன் கட்ட ஆரம்பித்து, அந்நிலத்திற் குடியிருந்த சனங்களையும் குடிபெழுப்பிவிட்டார். இந் நிகழ்ச்சிகள் அங்குள்ள மக்களுக்கு பெரிய துன்பத்தை விளைத்தன. ஆட்சி எடுக்க வந்த காலத்தில் அவர்கள் தடை செய்திருக்கலாம். அவர்கள் மீது சுவாமி ஞானப்பிரகாசர் கிறிமினல் வழக்குகள் தொடர்ந்ததாகத் தெரிகின்றது. ஆனால் ஒருவரும் குற்றவாளியாகக் காணப்படவில்லையென அறிகின்றோம். அவர்களுக்கு தாங்கள் வழிபட்டு வந்த ஆலயத்தைச் சுவாமி ஞானப்பிரகாசர் அழித்ததும் தொன்றுதொட்டு அவர்கள் குடியிருந்த நிலத்திலிருந்து அவர்களைத் துரத்தினதும் அவர்களுக்கு ஆறாத் துயரத்தைக் கொடுத்திருக்கின்றன. இப்போது அங்கு 20 பட்குடிகள் இருக்கின்றன. அவர்களுக்கு வழிபடக் கோவிலில்லை. அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்குச் சைவப்பள்ளிக்கூடமில்லை; அரசினர் பாடசாலையும் இல்லை. அவர்களுடைய பிள்ளைகள் இப்பொழுது ஒரு அமெரிக்கன் மிஷன் பாடசாலையிற் படிக்கிறார்கள்.

5 சுவாமி ஞானப்பிரகாசர் இணமாலைக் கலட்டி என்னும் கற்செறிந்த நிலத்தை இப்பொழுது வெடிவைத்து கல்லுக் கிளறித் திருத்தி வருகிறார் அந்நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யக்கூடியதாயும், மக்களைக் குடியிருக்கச் செய்யத்தக்கதாயும் கொண்டுவருவதே அவருடைய நோக்கம் அவர் ஆட்சியெடுத்தபின் இரண்டு மூன்று பட்குடிகளை அந்நிலத்திற் குடியிருக்கச்செய்து அவர்களைச் சத்தோலிக்க மார்க்கத்தில் சேரும்படியாகக் கேட்டபோது மதம் மாறுவது அவர்களுக்கு இஷ்டமில்லாதபடியால் அவர்கள் அவ்விடத்தைவிட்டகன்று வேறிடத்திற் குடியேறியிருக்கின்றனர். சுவாமி ஞானப்பிரகாசர் கட்டியிருக்கின்ற கிறிஸ்தவ ஆலயமும் அதைப் பண்படுத்தி வருகின்ற நிலமும், நவக்கிரிக் கிராமத்திலிருக்கின்ற பஞ்சமர்களைத் தமது சமயத்திற்கு மாற்றுவதற்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் ஒருவன்தான் மதம்மாற்றப்பட்டதாகவும் அவனும் திரும்ப சைவசமயத்தைச் சேர்ந்துவிட்டதாகவும் அறிகின்றோம். கல்வி, அறிவு, சீர்திருத்தம் இல்லாத அக்கிராமப் பஞ்சமர்கள் சுவாமி ஞானப்பிரகாசர் இட்டிருக்கின்ற வலைக்குள் அகப்படாமல் இருப்பதன் காரணம் அவர்களுடைய சமயாபிமானமே யாகும். ஆனால், சுவாமி ஞானப்பிரகாசரும் அங்குள்ள கோவிலுக்குக் காவலாளாக அவரால் நியமிக்கப்பெற்றுள்ள இளவாலை வாசியும் அடிக்கடி அவர்களைச் சந்திக்கும் வேளைகளில் இதமாகப் பேசி அவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள மதத்திற் சேர்க்க முயன்று வருகிறார்கள் என்பதற்கு ஐயமில்லை.

6 சுவாமி ஞானப்பிரகாசர் ஆட்சி எடுத்துக் கிறிஸ்தவ கோயிலைக் கட்டியபின் மேலே காட்டிய இணமாலைக் கலட்டி என்னும் காணி 1822-ம் ஆண்டில் முடிந்த வலிகாமம் கிழக்குப் புத்தூர் தோம்பு டாப்பில் இருந்து நா. ஆறுமுகத்தான் என்பவனுக்கும் மனுவல் என்பவனுக்கும் நாகந்தன் என்பவனுக்கும், நெல்லி என்பவனுக்கும், வெள்ளையன் என்பவனுக்கும் உரியதாக அறியக்கிடக்கின்றது. தோம்புப் பிரதிகள் யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து பெற்றிருக்கிறார்கள். இவ் வுறுதிகளைக் கொண்டு வழக்குத் தொடர்ந்து தங்கள் நிலத்தை அவர்கள் பெறுவதற்கு உதவியும் பணமும் இல்லாமலிருக்கின்றார்கள். சுவாமி ஞானப்பிரகாசருக்கு மேற்படி காணியில் 20 வருடத்திற்கு மேற்பட்ட ஆட்சி கிடைத்துவிட்டால் ஷை வழக்குப் பேசுவதில் பிரயோசனமில்லை.

7 மேற்படி அறிக்கையை எழுதுவதற்குச் சாட்சியங் கூறியவர்கள்:

1 வைத்தி சடையன்
2 கதிரன் த சி
3 வல்லி பாலன்
4 வல்லி முருகன்
5 பூதன் கணபதி
6 சின்னட்டி சங்கரன்
7 பாலன் செம்பன்
8 கதிரன் மாணிக்கன்
9 செம்பன் பெண் செம்பி
10 வயிரவன் வெள்ளையன்
11 ஐயன் கந்தன்
12 வைத்தியன் சடையன்
13 செம்பன் கந்தன்
14 இளைபவன் பாலன்

ஆகிய பஞ்சமர்கள்

15 நவக்கிரி வேளாள வகுப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பையா.

16 புத்தூர் வேளாள வகுப்பைச் சேர்ந்த தப்பி க. சிவகுரு.

இவர்களுடைய சாட்சியம் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கின்றது.

8 சபையார் மேலே குறித்த பஞ்சமர்களுக்குச் செய்யவேண்டிய உதவிகள் பின்வருமாறு:

(அ) அவர்கள் வழிபடுதற்கு ஒரு ஆலயமமைத்துக் கொடுப்பது.

(ஆ) இப்பொழுதுள்ள புதிய கல்வித் திட்டத்தின்படி சமயச்சார்பான பள்ளிக்கூடம் அமைக்க முடியாதாகையினால், நவக்கிரிக்கிராமப் பஞ்சமருடைய பிள்ளைகள் படிப்பதற்கு ஓர் பாடசாலை அவசியமென அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து அரசாங்கத்தார் மூலம் ஒன்றை நிறுவுதல்

(இ) மாதந்தோறும் நவக்கிரிப் பஞ்சமர்களுக்குச் சைவசமயப் பிரசங்கஞ் செய்ய ஒழுங்கு செய்தல்.

9 வருகிற பூரணைக்குச் சமீபமாக ஒரு தினத்தில் செல்வச் சந்நிதி தேர் தீர்த்தத்துக்குப் பின் சமயப் பிரசங்கங்கள் செய்ய ஒழுங்கு செய்வதாக அப்பஞ்சமர்களுக்கு வாக்குப்பண்ணி வந்தோம். திருவாளர்கள்: கு. சிற்சபேசன், பெ. அப்புககுட்டி, வ. சுப்பிரமணியம் ஆகியவர்களைப் பிரசாரகர்களாக முதன் முறைக்கு அனுப்பலாம.

10 நவக்கிரிச் சைவப் பணிக்குத் துணைபுரிவதற்கு அங்கு ஒரு கிளைச் சபையை நிறுவுதல்.

இங்ஙனம்

உபசபை அங்கத்தினர்கள்

1 பொ. அப்புக்குட்டி
2 ச. செல்வராசா
3 அ. கனகசபாபதி
4 மு. மயில்வாகனம்.

## பஞ்சம்! பசி! பட்டினி! நோய்! துன்பம்

1ம் பக்கத் தொடர்ச்சி

தன் முகத்தைப் பார்ப்பதைக்கண்ட தாயின் வயிறு பற்றி யெரிகிறது. அவள் என் செய்வாள்! தன் நாயகனது நிலையை அறிவாள்! எனவே, தன் சிசுவின் பரிதாப நிலையை வாய் விட்டு அவனுக்குக் கூற அவளுக்கு மனம் வருகிறதில்லை. குழவி தாய் முகம் நோக்க, அந்தத் தாயானவள் தன்கணவன்முகத்தைநோக்குகிறாள், கணவன் இந்த இலங்கையிலே யார் முகத்தை நோக்குவான்?

○

### பொறுப்பாளிகள் யார்?

இன்று எங்கள் இலங்கையிலே இந்தப் பரிதாபமானநிலை ஏற்படுவதற்கு ஜவாப்தாரிகள் யாவர்? "நீலக் கடலதின் மத்தியிலே ஒளிர் நித்திலம் சிந்திடும் பத்தியிலே" நின்று தாண்டவம் புரிந்த இந்த இலங்காதேவி — அந்தப் பாதகண்டத்துக்கே தன் மிஞ்சிய உணவுத் தானியங்களை யனுப்பிய எங்கள் இலங்கை, உலகப் பெருமக்களுக்கு ஓர் இலக்கா யிருந்த இலங்கை, அரசியன் ஞானிகளை, ஆண்டவன் அருட் பிரவாகத்தில் திளைத்த சீவன் முத்தரை, அரசியற்றுறைகளில் ஆர்வங் கொண்ட நிபுணர்களை, மனுநீதி தவறாது நீதி செலுத்திய புரவலரைப் பாவலரைக் கொண்டிருந்த எங்கள் இலங்கை - இன்றுஇக்கேவலநிலைக்கு வந்ததன் காரணமென்ன? இதற்கு யார் ஜவாப்தாரி? அந்நிய ராதிக்கம் தான் மெல்லமெல்லக் கழன்று, இந்தப் ப...னைந்து ஆண்டுகளாக இந்த நாட்டின் பரிபாலனம் எங்கள் சொந்தக் கைக்கு ஓரளவுக்கு வந்தபின்னரும், இக்கேவலநிலைமை இருப்பதன் காரணமென்ன? பதினைந்து ஆண்டுகளுக்குள் பழையனவற்றைக் குப்பைத் தொட்டிக்குள் எறிந்துவிட்டு புதிய ஜீவத்துவ முறைகளைக் கையாண்டு நாட்டு மக்கள் எல்லார்க்கும் அச்சம், பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றைப் போக்கி ஓர் புதிய சகாப்தம் உண்டாக்கி, "எல்லாரும் இந் நாட்டு வேந்தர்யாம்" என்று ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு குழந்தையும் மார்பு தட்டிக் கூறத்தக்க ஓர் நிலையை உண்டாக்கத் தவறிய தேசத் துரோகிகள்யாரென்று கேட்கிறேன். அவர்கள்தான் இன்றுஇந்தஇலங்கையின் அரசியலதிகாரத்தைக்கைப்பற்றிக்கும்மாளம்போடும் சேனநாயக்சாக்கோஷ்டியினர். இப்படியான ஓர் கேவலநிலையை இவர்கள் உண்டாக்கிய பின்னரும், இந்த நாட்டிலே அவர்கள் இன்றும் அதிகாரத்தில் இருக்கிறார்கள்.

### அரசாங்கக் கடுதாசி வைத்திருந்தவர்க்குச் சிறை

காணிக்கந்தோரில் 20 வருஷ காலமாகக் கடமை பார்த்த ஒரு சேவகன். அரசாங்கக் கடுதாசியை வைத்திருந்தார் என்ற குற்றத்தின்பேரில் 3மாதச் சிறைத் தண்டனை 19?2ம் ஆண்டில் விதிக்கப்பட்டார். அத்துடன் அவருடைய உத்தியோகமும் போய்விட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரியில் சைவப் பிரசங்கம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் 12-9-46 வியாழக்கிழமை மாலை 6½ மணி தொடக்கம் நவக்கிரிச் சங்கக்கடைக்கு அணித்தாகப் புத்தூர் திரு. க. ஏகாம்பர உபாத்தியாயர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் யாவருக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கப்பெற்று தேவாரபாராயணத்துடன் ஆரம்பிக்கப்பெற்றது. நவக்கிரியைச் சேர்ந்த மக்கள் பல பஞ்சமர்கள் உட்பட கூட்டத்திற் சமுகமாயிருந்தனர். தலைவரவர்களும், திருப்புகழ்வ சுப்பிரமணியம் அவர்களும், திரு. பொ. அப்புக்குட்டியவர்களும், பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் அவர்களும் திரு. வே. சுப்பையா அவர்களும் சைவசமயமாட்சி, சைவ சாதனங்களின் பெருமை, தூய்மை, சுய உணவு முதலிய விஷயங்களின் கருத்துக்கமைய பிரசங்கங்கள் செய்தனர். பெறுதற்கரிய சைவசமயத்தில் பிறந்தவர்கள் மூடத்தனமாகப் பிற சமயத்தவர்கள் வலையில் சிக்கிக்கொள்ளக் கூடாதெனவும் அதனால் விளையும் தீமைகளையுங் காட்டிக் கூறிப்புரை கூறப்பட்டது. இடையிடையே திருப்புகழ் திருவ சுப்பிரமணியம் அவர்கள் பொருள் விளங்கக்கூடிய முறையில் பக்தியோடு திருப்புகழ்ப் பாராயணமும் செய்தனர். சபைக் காரியதரிசி யாவருக்கும் நன்றி கூறினர். மாதந்தோறும் நவக்கிரி சைவ மக்களின் சமய அறிவு விருத்தியின்பொருட்டு பூரணை நாட்களில் சமயப்பிரசங்கம் செய்ய ஒழுங்கு செய்வதாகவும் தெரிவிக்கப்பெற்றது.

## பெற்றார்தின விழா

### வண்ணார்பண்ணை R. K. M. விவேகானந்த வித்தியாலயம்

மேற்படி பெற்றார்தின விழா நிகழும் விய ஷு ஆவணி மீ 29 உ (14-9-46) சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் திருவாளர் M. R. காராளசிங்கம் பிறக்டர் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயிற்று. பாடசாலைச் சிறுமிகளால் 'வந்தனப் பாட்டு'ப் பாடப்பட்டதும், தலைவர் தமது உரையில் பாடசாலைத் தலைமையாசிரியரினதும், உதவி யாசிரியரினதும், முகாமையாளரினதும் சேவைகளைப் பாராட்டினர், பின் குறித்த வித்தியாலயத் தலைமையாசிரியர் திருவாளர் வே. சுப்பிரமணியம் அவர்கள் பாடசாலை அறிக்கையை வாசித்தார். அதில் பாடசாலையின் அறைக் கட்டடத்துக்குப் பணம் உதவியவர்களின் பெயரும், செலவு விபரங்களும் வாசிக்கப்பட்டது. பின்னர் பாடசாலைச் சிறுவர் சிறுமிகளினால் பாட்டு, பேச்சு, கும்மி, அபிநய நாட்டியம் என்பன நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன. இறுதியில் 'கண்ணப்பநாயனர்' சரித்திரம் பக்கவாத்திய சகிதமாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. எல்லோருக்கும் நன்றி கூறியபின் தேவார பாராயணத்துடன் ஒன்பதரை மணியளவில் விழா இனிது நிறைவேறியது.

### மண்ணெண்ணெய்க் கட்டுப்பாடு நீங்குமா?

மண்ணெண்ணெய் வாங்குவதற்குரிய இப்போதுள்ள கட்டுப்பாட்டை நீக்குதற்கு இலங்கை அரசாங்கம் ஆலோசிக்கிறது; இலங்கையிலுள்ள கையிருப்பின் தொகையை ஆராய்ந்த பின், இவ்விஷயமான ஓர் முடிவு இவ்வாரம் முடிவதற்கிடையில் வெளியாகலாம்.

## விவாகம்

### துரைச்சாமி — நாகரத்தினம்

சென்ற சனிக்கிழமை (14-9-46) இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், இந்துசாதன ஆலயத்திற் கடமை பார்ப்பவராகிய ஆனைக்கோட்டை திரு. நாகமுத்து துரைச்சாமி அவர்களுக்கும், கொக்குவில் மேற்கு திரு. நமசிவாயம் அவர்களின் புத்திரியும், கொழும்பு உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உத்தியோகம் வகித்திருக்கும் திரு. சுந்தரமவர்களின் சகோதரியுமாகிய திருவளர் செல்வி நாகரத்தின அம்மாளுக்கும், மணமகளில்லத்தில் விவாகம் சிறப்பாக நிறைவேறியது.

தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னிற்பதாக.

●

### கோபால் குமாரசாமி — புஷ்பராணி

சென்ற வியாழக்கிழமை (12-9-46) இரவு 8 மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், யாழ்ப்பாணம் திரு. W. M. குமாரசாமியவர்களின் புதல்வரும் பொலிஸ் உபபரிசோதகராகக் கடமை யாற்றுபவருமாகிய திரு. கோபால்குமாரசாமியவர்களுக்கும் போயிட்டி திரு. K. சின்னையா அவர்களின் புதல்வி திருவளர் செல்வி புஷ்பராணிக்கும் மணமகளில்லத்தில் விவாகம் சிறப்பாக நிறைவேறியது. பின்னர்ச் சனிக்கிழமை (14-9-46) மாலை 6 மணி தொடக்கம் எட்டரை மணி வரையில் யாழ்ப்பாணப் பட்டின மண்டபத்தில் தம்பதிகள் தம் சுற்றமித்திரர் முதலானோரை இனிது உபசரித்துக் கொண்டாடினர்.

தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ இறைவன் திருவருள் புரிக.

●

### சோதிரத்தினம்—இராஜேஸ்வரி

நிகழும் ஆவணிமாசம் 27-ம் திகதி (12-9-46) வியாளக்கிழமை இரவு நிகழ்ந்த மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில் உரும்பிராய் திரு. A. செல்லையா சோதிரத்தினம் அவர்கட்கும் நவாலி வடக்கு திரு. K. நன்னித்தம்பி அவர்களின் புத்திரி செல்வி இராஜேஸ்வரிக்கும் மணமகளில்லத்தில் பல சுற்றமித்திரர் பெரியோர் சமுகத்தில் விவாகம் இனிது நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களும் பெற்று இன்புற்று நனிது வாழ்வார்களாக.

#### நன்கொடை

மேற்படி விவாகமங்கலம் நிகழ்ந்த பாது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வரித்து அனுப்பிய ரூபா 2 பெற்றும்.

மானேஜர்.

## ஜின்னு-வேவல் சந்திப்பு

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவதியடைகிறேனே என்று அவரை அல்லற்படுத்துகின்றன.

இதற்கிடையில் பல முஸ்லீம்லீக் பிரமுகர்கள் அங்குமிங்குமாக ஓடித் திரிகிறார்கள். ஏதாவது ஓர் சமரசத்தை யுண்டாக்கிவிட வேண்டும் என்பதே அவர்களுடைய அவா. வங்கப் பிரதமர் சுராவர்த்தி இன்று சமரசப் பல்லவியை அழகாக ஆலாபனை செய்து பாடுகிறார். ஆனால், இதே சுராவர்த்திதான "முஸ்லிம்லீக் இடைக்கால அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட அதே நிமிஷத்தில் வங்காள மாகாணம் மத்திய அரசாங்கத்திலிருந்து பிரிந்து பாகிஸ்தான் கொடியை ஆரோகணிக்கும்" என்று பரக்கப் பேசியவர். இவருடைய சண்டித்தன வார்த்தைகளை அப்படியே விழுங்கிய முஸ்லிம் பாமரர்கள் சென்றமாதம் 16ம் திகதி தங்கள் கைவரிசைகளைக் காட்டினர். அதற்கு நிகழ்ந்தது என்ன? ஹிந்துக்களுடைய நரம்பிலே இரத்தம்தான்—அதுவும் பழைய வீரபுருஷரின் இரத்தம்தான்—ஓடுகிறதென்பதைப் பட்டவர்த்தனமாகக் கண்டுகொள்ள, கலகமும் ஓய்ந்தது. இந்த சுராவர்த்திதான் இன்று சமரசத்தூதராக ஓடித்திரிகிறார்!

# உ

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

பாங்குறு தருச்சூழ் காலாப் பலிறழைச் சினைமென் கோம்பர்
நீங்கறப் புடையோய் வானி னிரந்தன பந்தராகத்
தூங்கிய பழனுங் காயுந் துணர்களு மகத்துட் டுன்ன
ஆங்கத னடுவட் பொய்கை யணிநிழ லமர்ந்தா னையன்

அத்தடாகத்தின் கரையில் நிற்கும் மரங்களே சூழநாட்டிய கால்களாகவும், இடையீடின்றிச் செறிந்து நாற்புறமும் பரந்து ஆகாயத்தில் விளங்குகின்ற பல கிளைகளோடுந் தழைகளோடுங்கூடிய கொம்பர்களே பந்தராகவும், அக்கொம்பர்களிலே தொங்குகின்ற கனிகளும் காய்களும் பூங்கொத்துக்களும் (அப்பந்தருக்குச் செய்த அலங்காரங்கள் போல) உள்ளே விளங்கவும், அப்பந்தரின் தண்ணிய நிழலில், சரவணப் பொய்கையின் மத்தியிலே தலைவராகிய சண்முகமூர்த்தி யெழுந்தருளினா ரென்பது கருத்து.

பாங்கு - கரை: சூழ் என்றதனால் அத்தடாகத்தின் நாற்புறத்துஞ் சூழ்ந்த கரைக ளென்பது பெறப்பட்டது: கால் - இக்காலத்திற் "கப்பு" எனவும் வழங்கப்படும். பந்தருக்கு இடையீ டிருப்பின் அப்பந்தர் வாயிலாக வெயில் வீழ்தல் முதலிய பங்கங்க ளுண்டாதலால், இப்பந்தர் அப்படியான இடையீடின்றிச் செறிவுடைய பந்தரென்பார் 'பலிறழைச் சினைமென் கொம்பர் நீங்கறப் புடைபோய் வானி னிரந்தன..." என்றார். நீக்கற என்பது எதுகை நோக்கி நீங்கற என மெலிந்து நின்றது; ஆங்கதன் அணிநிழல், பொய்கை நடுவண் எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது.

சரவண வாவியின் நான்கு கரைகளிலும் நிற்கும் மரங்களே பந்தற் கால்களாக, அம் மரங்களிலுள்ள பல தழைகளோடும் கிளைகளோடும் விரவிய கொம்பர்களே பந்தரின் மேற்கட்டியாக, அவற்றின்கண்ணே தொங்குகின்ற கனி காய் துணரென்னு மிவைகள் அப்பந்தரின் உட்பக்கத்தில் அமைத்த அலங்காரப் பொருள்களாகப் பொருந்தி இயற்கைப் பந்தலாக அமைய, தாமரைத் தடாகமாகிய அடித்தளத்துப் பொருந்திய 'வெறிகமழ் கமலப்போது" ஆகிய பீடத்தின்மீது சண்முகப் பெருமான் வீற்றிருந்தருளினா ரென்பது இத் திருவிருத்தத்தில் எடுத்துக் காட்டப்பட்டவாறும்.

இது முதலாக 113-ம் திருவிருத்தம் இறுதியாக ஆசாரிய சுவாமிகள் சரவணப் பொய்கையிற் சண்முக மூர்த்தி எழுந்தருளிய காட்சியை ஒப்பற்ற அற்புத முறையில் வர்ணிக்கும் நுட்பம் பாராட்டத்தக்கதென்க.

(97)

முடிபொறு தசையு நாகர் முதியகால் பலகை வையந்
தொடர்கரை மரனே வானந் தூங்குபன் னுணந் தெண்ணீர்த்
தடமலர் பாயலாகச் சரவண மஞ்ச மீதில்
நடைதரு மைந்தன் மென்கா லசைப்பவீற் றிருந்தா னன்றே.

சிரசிற் பொருந்திய பூமி பாரத்தைப் பொறுக்கலாற்றாது அசைகின்ற ஆதிசேடன் முதலாம் பாம்புகளே திண்ணிய கால்களாகவும், பூமியே பலகையாகவும், தடாகத்தின் கரையிலே பொருந்திய மரங்களே கயிறு (சங்கிலி) ஆகவும், முகில்களே தொங்குகின்ற மேற்கட்டியாகவும், தெளிந்த நீரையுடைய பொய்கையிலேயுள்ள தாமரைப் பூக்களே பாயாகவும் பொருந்த, சரவணப் பொய்கை யென்று சொல்லப்படும் அந்த மஞ்சத்திலே, ஆங்குத் தோன்றியருளிய சிவகுமாரராகிய சண்முகக் கடவுள், இளந் தென்றற்காற்று ஆட்ட எழுந்தருளி யிருந்தா ரென்பது கருத்து.

அசைகின்ற நாகங்களே மஞ்சத்தின் அடியிலுள்ள கால்களாகவும், வையம் பலகையாகவும், கரைமரனே தொடராகவும், முகிலே பன்னுணமெனப்படும் மேற்கட்டியாகவும், தாமரைப் பூக்களே பூம்பாயலாகவும் பொருந்த, அந்தச் சரவணவாவியாகிய மஞ்சத்தில், சிறுதென்றல் (ஆட்டுவோனாக) அசைப்ப, சிவகுமாரர் எழுந்தருளியிருந்தா ரென்க: பாயலாக என்பதில் வரும் ஆக என்பதை கால், பலகை, தொடர், பன்னுணம் என்னுமிவற்றோடுஞ் சேர்த்துப் பொருள்கொள்க; மஞ்சத்தின் கால்களாயமைந்த நாகரே யசைவதனால் மஞ்சம் முழுவதும் அசையலாயிற் றென்பது சொல்லாதே யமையும். குழந்தை வடிவேற் பெருமானை, முந்திய திருவிருத்தத்தில் இயற்கையா லமைந்த பந்தரின்கீழ் எழுந்தருளச் செய்து பத்தியுடன் தரிசித்த ஆசாரிய சுவாமிகள், இங்கே அந்தப் பெருமானை இயற்கையா லமைந்த தூங்கு மஞ்சத்தின்கண்ணே வீற்றிருக்க வைத்துத் தரிசித்தவாறும்.

இத் திருவிருத்தத்தின் இரண்டாமடியில் வரும் "தொடர்கரை மரனே வானந் தூங்கு பன்னுணம்" என்ற தொடருக்கு 'கரையின் கண்ணே நிரைபட்டு நிற்கின்ற ஆகாயத்திற் றூங்குகின்ற பல கயிறுகளாகவும்" என உரை கொண்டமை சிறிதும் பொருந்தாதென்க; இந்த உரையாசிரியர் "பல்நாணம்" பல கயிறுகள் எனக் கொண்டுள்ளார்; நாணம் - கயிறென்னும் பொருளில் வருதல் யாண்டுமில்லையாம்.

[கரைமரனே தொடர் - கரையிலுள்ள மரங்களே சங்கிலிகளாக; வானம் தூங்கு பன்னுணம் (ஆக) - முகில்கள் தொங்குகின்ற பன்னுங்காக; பன்னுணம் - பன்னுங்கு, இங்கே மேற்கட்டியாம். மென்கால் - மந்தமாருதமாகிய ஆட்டுவோன்]

(98)

## முடியாது போ!

லண்டனிலே ஓர் வட்டமேசை மகாநாடு கூட்டி, இந்தியப் பிரச்சினைகளை முதலில் இருந்து இனி ஆலோசிக்கவேண்டும் என்று ஜின்னா பிரிட்டிஷ் மந்திரிசபைக்கு ஓர் ஆலோசனை கூறினார் என்றும், அந்தக் கேள்வியை பிரிட்டிஷ் மந்திரிசபை நிராகரித்து விட்டது என்றும் சென்னை 'ஹிந்து' பத்திரிகையின் லண்டன் நிருபர் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

—

### செவ்வாய் செப் 17

காலை: 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை 8.30 டி எஸ் விசுவநாதய்யர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி எஸ் விச்வநாதய்யர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 டி எஸ் விச்வநாதய்யர் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 லாக்குவோர் விசாரம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 மதராசில் உள்ளபடி (டாக்டர் வீடு) 8.30 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீச்சள் கேட்டவை 10.30 முடிவு.

### புதன் செப் 18

காலை: 7-15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாமெலி வாத்ய கோஷ்டி 8.30 காஞ்சீபுரம் ஏ வி திரிபுர சுந்தரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காஞ்சீபுரம் ஏ வி திரிபுரசுந்தரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 காஞ்சீபுரம் ஏ வி திரிபுரசுந்தரி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை: 5 பழமார்நேரி எஸ் நடராசன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சத்ரகானம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 திரைப்பட விமர்சனம் 8 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் 8 30 பழமார்நேரி எஸ் நடராசன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் செப் 19

காலை 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 வி கங்காதரம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 குழல் இசை 8.30 வி அலயாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 வி அலயாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 வி அலயாம்பாள் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 ஆர் ஷண்முகசுந்தரம் வீணை 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 வி கங்காதரம்பிள்ளை பாட்டு 7-15 இலக்கிய வாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7.45 நாகம்மா, கமலா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 சாமகிலகன நாடகம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆர் ஷண்முகசுந்தரம் வீணை 10-30 முடிவு

### வெள்ளி செப் 20

7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எம் சுலோசன பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சிவாத்ய கோஷ்டி 8.30 கடலூர் எம் சுப்ரமணியம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கடலூர் எம் சுப்ரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கடலூர் எம் சுப்ரமணியம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 திருப்பாம்புரம் டி எஸ் எஸ் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 5.40 குரான்வரிப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7-45 திருப்பாம்புரம் டி எஸ் எஸ் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-30 எம் சுலோசன பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஜே எப் உப்துர்கனி ஸிதார் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 உலகவிவகாரங்கள் 10 தேசசேவை 10.30 முடிவு.


## கந்தசாமி வைத்தியர்
### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும் பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)






எங்கும் கியாதிபெற்ற எமது **ரேடியோ பீடிகளையே** எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்: எல்லாஊர்களிலும் கிடைக்கும் **மொடேண் ஏஜென்சீஸ்,** சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

**S. கனகசபை**
சிறாப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறிஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச் செய்யப்பட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத்தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில் ஏமாந்து நட்டப்படாதீர்கள்

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்

(Misc. 250—19-3-46—19-9-46) (செ) 1888-ம் ஆண்டு முதல்.



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டோன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday September, 17, 1946.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org